## புதிதாக காவல் நிலையங்கள் – தீயணைப்பு நிலையங்கள் – கட்டடங்கள்!

# 3,363 காவலர்கள் - சிறைக்காவலர்கள் தேர்வு செய்யப்படுவர்!

## பேரவையில் – காவல்துறை மானியக் கோரிக்கையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான அறிவிப்புகள்!

**சென்னை, மே 01 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காவல்துறை மான்யக் கோரிக்கைக்கு பதிலளித்து உரையாற்றுகையில் "புதிதாக காவல் நிலையங்கள், தீயணைப்பு நிலையங்கள், கட்டடங்கள் ஏற்படுத்தப்படும்" என்றும் "காவலர்கள், சிறைக்காவலர்கள் புதிதாக 3,363 பேர் தேர்வு செய்யப்படுவர்" என்றும் அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டார்.**

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான பதிலுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:-

**காவல் துறை**

**I.புதிய காவல் நிலையங்கள், புறக்காவல் நிலையங்கள், உட்கோட்டங்கள், பிரிவுகள் உருவாக்குதல்**

**1.கோயம்புத்தூர் மாவட்டம் நீலாம்பூரில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், அதிகளவில் தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் நிறைந்த பகுதியாக இருப்பதாலும், வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதாலும், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும் மற்றும் போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், கோயம்புத்தூர் மாவட்டம் நீலாம்பூரில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 4.88 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**2.சிவகங்கை மாவட்டம் கீழடியில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வரும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக உள்ளதாலும், தமிழரின் நாகரிகத்தின் தொன்மையை பறைசாற்றும் இப்பகுதி சுற்றுலாத் தலமாகவும், வளர்ந்து வரும் பகுதியாகவும் இருப்பதால் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை உட்கோட்டத்தில் உள்ள கீழடியில் புதிதாக காவல் நிலையம் ரூ.2.83 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**3.திருநெல்வேலி மாவட்டம் மேலச்செவலில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்**

## புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் இரண்டு தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலகுகள் உருவாக்குதல்!

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், முன்னீர்பள்ளம் காவல் நிலையத்திலிருந்து இப்பகுதி தொலைவில் இருப்பதாலும், வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதாலும், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும் திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி உட்கோட்டத்தில் உள்ள மேலச்செவலில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 4.88 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**4.திருப்பூர் மாவட்டம் பொங்கலூரில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், கோழிப் பண்ணைகள், விசைத்தறிகள் மற்றும் நெசவுத் தொழிற்சாலைகள் கொண்ட வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதால், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், திருப்பூர் மாவட்டம், பல்லடம் உட்கோட்டத்தில் உள்ள பொங்கலூரில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 2.83 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**5.கள்ளக்குறிச்சி மாவட்டம், களமருதூரில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், திருநாவலூர் காவல் நிலையத்தில் இருந்து இப்பகுதி தொலைவில் இருப்பதாலும், வளர்ந்துவரும் பகுதியாக இருப்பதாலும் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை உட்கோட்டத்தில் உள்ள களமருதூரில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 2.83 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**6.நாமக்கல் மாவட்டம் கொக்கராயன்பேட்டையில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், திருச்செங்கோடு காவல் நிலையத்திலிருந்து இப்பகுதி தொலைவில் இருப்பதாலும், வளர்ந்துவரும் பகுதியாக இருப்பதாலும், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு உட்கோட்டத்தில் உள்ள கொக்கராயன்பேட்டையில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 4.88 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**7.திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை கோவில் காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலையில் உள்ள அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில், தற்போது ஆண்டு முழுவதும் கூட்டம் அதிகமாக உள்ளதாலும், வார இறுதி நாட்களிலும், பௌர்ணமி நாட்கள் மற்றும் அனைத்து விடுமுறை நாட்களிலும் கூட்டம் அதிகமாக உள்ளதாலும், சில நாட்களில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வந்து செல்வதாலும் திருவண்ணாமலை திருக்கோவிலுக்கென புதிதாக காவல் நிலையம் ரூபாய் 2.83 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**8.கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் புதிதாக இருப்புப்பாதை காவல் நிலையம் உருவாக்குதல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறை பகுதியானது நாகர்கோவில் இருப்புப் பாதை காவல் நிலையத்திலிருந்து தொலைவில் இருப்பதாலும், அதிகளவில் இரயில் பயணிகள் வந்து செல்வதாலும், முக்கியமான இரயில் நிலையமாக இருப்பதாலும், இரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும் குழித்துறையில் புதிதாக இருப்புப்பாதை காவல் நிலையம் ரூபாய் 2.15 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**9.மதுரை மாநகரக் காவல் ஆணை யரகத்தில் சிந்தாமணியில் புதிதாக காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், பள்ளிகள், கல்வி நிலையங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் கொண்ட வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதால், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், மதுரை மாநகரக் காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட சிந்தாமணியில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 6.57 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**10.மதுரை மாநகரக் காவல் ஆணையரகத்தில் மாடக்குளத்தில் புதிதாக காவல் நிலையம் உருவாக்குதல்**

பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், பள்ளிகள், கல்வி நிலையங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் கொண்ட வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதால், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், மதுரை மாநகரக் காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட மாடக்குளத்தில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 6.57 கோடி செலவில் உருவாக்கப்படும்.

### திருவல்லிக்கேணி – பெரம்பூரில் புறக்காவல் நிலையங்கள்!

**11.சென்னை பெருநகரம், திருவல்லிக் கேணி ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில், புறக்காவல் நிலையம் அமைத்தல்**

சென்னை பெருநகரம், திருவல்லிக்கேணியில் உள்ள ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையை பொறுத்தவரை, ஏராளமான நோயாளிகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுவதால், பார்வையாளர்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், பார்வையாளர்களுக்கும் உள்நோயாளிகளுக்கும் உதவுவதற்காகவும், மருத்துவமனை வளாகத்திற்குள் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த ஏதுவாகவும் இவ்வளாகத்தில் தேவையான பணியாளர்களுடன் ஒரு புறக்காவல் நிலையம் ரூபாய் 7.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**12.சென்னை பெருநகரம், பெரம்பூர், பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் புறக்காவல் நிலையம் அமைத்தல்**

சென்னை பெருநகரம், பெரம்பூரிலுள்ள பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை பொறுத்தவரை, ஏராளமான நோயாளிகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுவதால், பார்வையாளர்களின் வருகை நாளுக்கு நாள்



அதிகரித்து வருவதாலும், பார்வையாளர்களுக்கும் உள்நோயாளிகளுக்கும் உதவுவதற்காகவும், மருத்துவமனை வளாகத்திற்குள் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த ஏதுவாகவும் இவ்வளாகத்தில் தேவையான பணியாளர்களுடன், ஒரு புறக்காவல் நிலையம் ரூபாய் 7.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

### உத்திரமேரூர் – வேளாங்கண்ணி பள்ளிப்பாளையத்தில் காவல் உட்கோட்டம்!

**13.காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் புதிதாக காவல் உட்கோட்டம் உருவாக்குதல்**

முதல் தகவல் அறிக்கைகளை பதிவு செய்தல், பரந்த அதிகார வரம்பு. அதிகரித்து வரும் மக்கள் தொகை, நகர்ப்புர விரிவாக்கம் மற்றும் பாதுகாப்பு, அதிக எண்ணிக்கையிலான மக்கள் குறைதீர் மனுக்கள், சாலை விபத்துகள் மற்றும் சாலை பாதுகாப்பு ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, தேவையான பணியிடங்களுடன் ரூபாய் 72.30 இலட்சம் செலவில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் புதிதாக காவல் உட்கோட்டம் உருவாக்கப்படும்.

**14.நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் புதிதாக காவல் உட்கோட்டம் உருவாக்குதல்**

முதல் தகவல் அறிக்கைகளை பதிவு செய்தல், பரந்த அதிகார வரம்பு, அதிகரித்து வரும் மக்கள் தொகை, நகர்ப்புர விரிவாக்கம் மற்றும் பாதுகாப்பு, அதிக எண்ணிக்கையிலான மக்கள் குறைதீர் மனுக்கள், சாலை விபத்துகள் மற்றும் சாலை பாதுகாப்பு ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, தேவையான பணியிடங்களுடன் ரூபாய் 72.30 இலட்சம் செலவில் நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் புதிதாக காவல் உட்கோட்டம் உருவாக்கப்படும்.

**15நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் புதிதாக காவல் உட்கோட்டம் உருவாக்குதல்**

முதல் தகவல் அறிக்கைகளை பதிவு செய்தல், பரந்த அதிகார வரம்பு, அதிகரித்து வரும் மக்கள் தொகை, நகர்ப்புர விரிவாக்கம் மற்றும் பாதுகாப்பு, அதிக எண்ணிக்கையிலான மக்கள் குறைதீர் மனுக்கள், சாலை விபத்துகள் மற்றும் சாலை பாதுகாப்பு ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, தேவையான பணியிடங்களுடன் ரூபாய் 72.30 இலட்சம் செலவில் நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் புதிதாக காவல் உட்கோட்டம் உருவாக்கப்படும்.

**16. சென்னை பெருநகர காவல் அரும்பாக்கம் சரகத்தில் புதிதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைத்தல்**

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் பிரச்சனைகள் குறித்த புகார்களை பிரத்யேகமாக கையாளுவதற்காக, அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதினை கருத்தில் கொண்டு, சென்னை பெருநகர காவல், அரும்பாக்கம் சரகத்தில் புதிதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் ரூபாய் 2.68 கோடி செலவில் அமைக்கப்படும்.

**17.சென்னை பெருநகர காவலின் நுண்ணறிவுப் பிரிவில் புதிதாக திட்டமிட்ட குற்றப் பிரிவு (Organised Crime Cell) உருவாக்குதல்**

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவிடும் வகையிலும், சென்னை பெருநகர காவல் எல்லையில் சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் மற்றும் குற்றக் குழுக்கள் நிகழ்த்தக்கூடிய திட்டமிட்ட குற்றங்களை கட்டுப்படுத்திடவும், சென்னை பெருநகர காவலின் நுண்ணறிவுப் பிரிவில் புதிதாக திட்டமிட்ட குற்றப் பிரிவு ரூபாய் 13 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**18.சென்னை பெருநகர காவலின் நுண்ணறிவுப் பிரிவில் புதிதாக போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு (Anti Narcotics Intelligence Unit) உருவாக்குதல்**

சென்னை பெருநகர நுண்ணறிவுப் பிரிவு ஆளிநர்கள், போதை பொருட்களின் நடமாட்டம், விற்பனை ஆகியவை குறித்து நுண்ணறிவு தகவல்களை திரட்டவும், கடத்தலில் ஈடுபடுவோரின் நடவடிக்கைகளை கண்காணித்து போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாகவும், சென்னை பெருநகர காவலின் நுண்ணறிவுப் பிரிவில் புதிதாக போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஒன்று ரூபாய் 8 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**19.சென்னை பெருநகர காவலின் மத்திய குற்றப் பிரிவில் செயல்படும் இணையவழி குற்றப் பிரிவில் புதிதாக சமூக ஊடக நுண்ணறிவுப் பிரிவு (Social Media Investigation Unit) உருவாக்குதல்**

மத்திய குற்றப் பிரிவின் (CCB) இணையவழி குற்றப் பிரிவானது, நிதி மற்றும் நிதி சாராத கணினி வழி குற்றங்களை கையாளுகிறது. சமூக ஊடகம் தொடர்பான குற்றங்கள் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவும், உண்மை கண்டறியும் பிரிவு மற்றும் தேசிய இணையவழி குற்ற புகார் இணைய முகப்பு ஆகிய பிரிவுகளிலிருந்து பெறப்படும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து ஆட்சேபகரமான பதிவுகளை நீக்குவதற்காகவும், பதிவேற்றியவர் குறித்த தகவலை கண்டறிவது, வழக்கு பதிவு செய்து குற்றவாளியை கண்டுபிடிப்பது போன்ற பணிகளை சமூக ஊடக தளங்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளவும், சென்னை பெருநகர காவல் மத்திய குற்றப் பிரிவின் இணைய வழி குற்றப் பிரிவில், தேவையான பணியிடங்களுடன் சமூக ஊடக நுண்ணறிவுப் பிரிவு ஒன்று புதிதாக ரூபாய் 63 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் குற்றப்பிரிவு – புதிய அலகு!

**20.செங்கல்பட்டு மாவட்டத்தில் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கென புதிய அலகு உருவாக்குதல்**

செங்கல்பட்டு மாவட்டத்தில் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகளை சீர்படுத்த வேண்டிய தேவையினைக் கருத்தில் கொண்டு, தேவையான பணியிடங்களுடன் செங்கல்பட்டு மாவட்டத்தில் குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கென புதிய அலகு ஒன்று ரூபாய் 1.05 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**21.புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் இரண்டு தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலகுகள் உருவாக்குதல்**

மறைமுக மற்றும் நேரடி அரசியல் நடவடிக்கைகள் மற்றும் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க கூடிய மற்றும் மத நல்லிணக்கத்தை குலைக்கக் கூடிய அமைப்புகளை கட்டுப்படுத்துவதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் தலா ஒன்று வீதம் இரண்டு தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலகுகள் ரூபாய் 4.04 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**22.இருப்புப் பாதை காவல் நிலையங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக சென்னையில் உள்ள தலைமையிடத்தில், புதிய தொலைத் தொடர்பு சாத னங்களைக் கொண்ட ஒருங்கிணைந்த தலைமைக் கட்டுப்பாட்டு அறை (Integrated Master Control Room), வெடிகுண்டுகளை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு மற்றும் மோப்ப நாய் பிரிவு அமைத்தல்**

இருப்புப் பாதை காவல் நிலையங்களின் பணிகளை ஒருங்கிணைத்து குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கவும், கைதிகளின் வழிக்காவல் குறித்த தகவல்களை மற்ற மாநிலங்களுடன் பகிரவும், இதன்மூலம் பொது மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், சென்னையில் உள்ள தலைமையிடத்தில் தேவையான பணியிடங்களுடன், புதிய தொலைத் தொடர்பு சாதனங்களைக் கொண்ட ஒருங்கிணைந்த தலைமை கட்டுப்பாட்டு அறையும், வெடிகுண்டுகளை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவும் மற்றும் மோப்ப நாய்ப் பிரிவும் ரூபாய் 1 .14 கோடி செலவில் அமைக்கப்படும்.

**23.குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை பெருநகர பகுதிகளில், ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்வாக பணிகளுக்காக இரண்டு புதிய காவல் கண்காணிப் பாளர் பணியிடங்கள் உருவாக்குதல்**

குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் மெட்ரோ பிரிவு, சர்வதேச காவல் நிலைய மனுக்கள் மற்றும் நிர்வாகப் பணிகளுக்காகவும், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் பெருநகரப் பகுதிகளில், ஒருங்கிணைப்பு பணிகளை மேற்பார்வையிடவும் இரண்டு புதிய காவல் கண்காணிப்பாளர் பணியிடங்கள் ரூபாய் 63 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**24.ஆவடி போக்குவரத்து காவல் பிரிவினை இரண்டாகப் பிரித்து செங்குன்றம் மாவட்ட போக்குவரத்து காவல் பிரிவு புதிதாக உருவாக்குதல்**

ஆவடி மாநகர காவல் போக்குவரத்து பிரிவின் செங்குன்றம் பகுதியில் விபத்துகளைக் குறைக்கவும், விபத்தினால் பாதிக்கப்படும் பொது மக்களின் வழக்குகளை விரைந்து விசாரணை செய்யவும், கண்காணிப்பு அவசியமாவதைக் கருத்தில் கொண்டு, ஆவடி போக்குவரத்து காவல் பிரிவினை இரண்டாகப் பிரித்து ஒரு துணை காவல் ஆணையாளர் பணியிடத்துடன், செங்குன்றம் மாவட்ட போக்குவரத்து காவல் பிரிவு புதிதாக ரூபாய் 59 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**25.சென்னை பெருநகரக் காவல் ஆயுதப் படையில் புதிய பணியிடங்கள் உருவாக்குதல்**

சென்னை, இந்திய பெருநகரங்களில் ஒன்றாகவும், தமிழ்நாட்டின் தலைநகராகத் திகழ்வதாலும், மிக முக்கிய நபர்கள் மற்றும் அரசுப் பிரதிநிதிகள் ஆகியோரின் வருகையின்போது, பாதுகாப்பினை பலப்படுத்தவும், வழிக்காவல் பணி, நிரந்தர பாதுகாப்பு போன்றவற்றிற்கென ஆளிநர்கள் மற்றும் மேற்பார்வை அதிகாரிகள் நியமிக்கப்படு வதைக் கருத்தில் கொண்டு, தேவையான புதிய பணியிடங்கள் இரண்டு கட்டங்களாக ரூபாய் 21.02 கோடி செலவில் உருவாக்கப்படும்.

இதற்கான முதற்கட்ட செலவினம் ரூபாய் 10.51 கோடி ஆகும்.

**26.. சிலைத் தடுப்புப் பிரிவு, இணையவழி குற்றப் பிரிவு, இரயில்வே காவல் (சென்னை மற்றும் திருச்சி இரயில்வே மாவட்டங்கள்) ஆகியவற்றிற்காக சட்ட ஆலோசகர் பதவிகள் உருவாக்குதல்**

நீதிமன்றங்களில் விசாரணைக்கு வரும் வழக்குகளுக்கு சட்ட ஆலோசனை வழங்கிட ஏதுவாக, சிலைத் தடுப்புப் பிரிவு, இணையவழிக் குற்றப் பிரிவு, இரயில்வே காவல் (சென்னை மற்றும் திருச்சி இரயில்வே மாவட்டங்கள்) ஆகியவற்றிற்காக தலா ஒன்று வீதம் 04 சட்ட ஆலோசகர் பதவிகள் ரூபாய் 24 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**27. காவல் ஆய்வாளர் பணியிடங்கள் 280 கூடுதலாக உருவாக்கப்பட்டு, சார்பு ஆய்வாளர் தலைமையிலான காவல் நிலையங்கள் ஆய்வாளர் தலைமையிலான காவல் நிலையங்களாக தரம் உயர்த்துதல்**

சட்டம் ஒழுங்கை சிறப்பாக பராமரிக்கவும், திறம்பட செயல்படவும், அன்றாட அவசர நிலைகளை கையாளவும், பொது மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில், 280 சார்பு ஆய்வாளர் தலைமையிலான காவல் நிலை யங்கள், ஆய்வாளர் தலைமையிலான காவல் நிலையங்களாக மாற்றப்படும்.

இதன்மூலம், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவும், குற்ற வழக்குகளை விசாரிக்கவும், நீதி மன்றங்களில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யவும், சட்டம் ஒழுங்கு, சாதி, வகுப்புவாத பிரச்சனைகளை கட்டுப்படுத்தவும் முடியும். இதற்கான தொடர் செலவினம் ரூபாய் 1 .18 கோடி ஆகும்.

### காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள்!

**II புதிய கட்டடங்கள் கட்டுதல் / பழைய கட்டடங்கள் பழுதுபார்த்தல்**

**28.நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கான முகாம் அலுவலகம் கட்டுதல்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கான முகாம் அலுவலக பழையக் கட்டடம் பழுதடைந்துள்ளதால், அதனை இடித்துவிட்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கான புதிய முகாம் அலுவலகக் கட்டடம் ரூபாய் 3.38 கோடி செலவில் கட்டப்படும்.

**29.திருப்பூர் மாநகரக் காவல் ஆணையாளருக்கு முகாம் அலுவலகத்துடன் இணைந்த குடியிருப்பு கட்டடம் கட்டுதல்**

புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மாநகரத்தின் காவல் ஆணையாளருக்கு முகாம் அலுவலகத்துடன் இணைந்த குடியிருப்பு ரூபாய் 3.28 கோடி செலவில் கட்டப்படும்.

**30.திருச்சி மாவட்டம் கொள்ளிடம் மற்றும் காணக்கிளியநல்லூர் ஆகிய காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்**

திருச்சி மாவட்டம் கொள்ளிடம் மற்றும் காணக்கிளியநல்லூர் ஆகிய இடங்களில் முறையே ரூபாய் 1.95 கோடி மற்றும் ரூபாய் 2.16 கோடி செலவில் புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்டப்படும்.

**31.திருவாரூர் மாவட்டம் வலங்கைமான், நீடாமங்கலம் மற்றும் குடவாசல் ஆகிய காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்**

**திருவாரூர் மாவட்டம் வல**ங்கைமான், நீடாமங்கலம் மற்றும் குடவாசல் ஆகிய இடங்களில் முறையே ரூபாய் 2.68 கோடி, ரூபாய் 2.44 கோடி மற்றும் ரூபாய் 2.46 கோடி செலவில் புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்டப்படும்

**32.திருவண்ணாமலை மாவட்டம் வானாபுரம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

திருவண்ணாமலை மாவட்டம் வானாபுரம் காவல் நிலையத்திற்கு ரூபாய் 2.02 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்